ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2194/20 - 2020 සැප්තැම්බර් මස 22 වැනි අඟහරුවාදා - 2020.09.22

**2194/20 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி செவ்வாயக்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) பிரிவின் கீழான கட்டளை*

***2020 ஆம் ஆண்டின் 143 ஆம் இலக்கக் கட்டளை***

எனது குறிப்பு இல. : 4-3/ 17/2018/ E/404.
பிர. செ. குறிப்பு இல. : 2/2/1/143.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் காணி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், இங்கு கீழ்க் காணும் அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகார மளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையைப் பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

எஸ்.எம். சந்திரசேன,
காணி அமைச்சர்.

காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
இல. 1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2020, செத்தெம்பர் 16.

**அட்டவணை**

1. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்** : பிரதேச செயலாளர், கம்பஹா.

2. **காணியின் விபரம்**: மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், கம்பஹா பிரதேச செயலாளர் பிரிவில், மெத பத்துவ கோரளே சிறு பிரிவில், 234, பெண்டியமுல்ல வடக்கு கிராம அலுவலர் பிரிவில், பெண்டியமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் 2019.05.31 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட முதற்சுவட்டு வரைபட இலக்கம் GA/GAM/2019/176 இல் விபரிக்கப்பட்டுள்ள காணித் துண்டுகளின் எல்லைகள்:

1. **துண்டு 'A' - அலுபோகஹவத்தை - விஸ்தீரணம் : 0.3280 ஹெக்டயார்**

வடக்கு : உரிமை கோருவோர் மற்றும் வரிமதிப்பீட்டு இலக்கம் கண்டுபிடிக்க முடியாத காணி, வீதி மற்றும் ரத்னாவலிய பாலிகா வித்தியாலய வளாகம்; கிழக்கு : ரத்னாவலிய பாலிகா வித்தியாலய வளாகம் மற்றும் சியனே வீதியின் வரிமதிப்பீட்டு இல. 32/20 மற்றும் 32/19 ஐக் கொண்ட காணி ; தெற்கு :சியனே வீதியின் வரிமதிப்பீட்டு இல. 32/ 19 ஐக் கொண்ட காணி, கஜபா மாவத்தை வரிமதிப்பீட்டு இல. 45, 1/ 43 மற்றும் 39 ஐக் கொண்ட காணி ; மேற்கு: கஜபா மாவத்தை வரிமதிப்பீட்டு இல. 39, 29 ஐக் கொண்ட காணி மற்றும் வரிமதிப்பீட்டு இலக்கம் கண்டுபிடிக்க முடியாத காணி.

10-255


1A – G32948 – 20(2020/09) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.